
நாகூர் நாயகம் வரலாறு
தொகுப்பு: ஜே.எம்.சாலி எம்.ஏ
காஜியார் புக் டிப்போ
தஞ்சாவூர்.

நாகூர் நாயகம் வரலாறு

வெளியீடு :

காஜியார் புக் டிப்போ

முஸ்லிம் தெரு. M. சாவடி, தஞ்சாவூர்

ஊ: 1529

நாகூர் ஷாஹுல் ஹமீது நாயகம்

தொழுகைக்கான பாங்கு ஒலி காற்றில் கலந்து வருகிறது.

மணி மண்டபத்திலிருந்து மணியோசை கேட்கிறது. சிறிது நேரம் ஷெனுய் இசை தவழ்ந்து வருகிறது. நாதசுரம் இசைக்கப்படுகிறது.

இந்த ஒலிகளோடு பக்தர்களின் பெருமித ஆரவாரமும் சேர்ந்து கொள்கிறது.

நாள் முழுதும் விழாக்கோலம்.

'பாங்கு' சத்தமும், மணி ஓசையும், ஷெனுயும், நாதசுரமும் ஒருங்கே ஒலிக்கும் ஒரு ஸ்தலம் இந்தியாவில் வேறெங்காவது இருக்க முடியுமா? இல்லை. நாகூர்ப்பதியின் தனிச்சிறப்பு அது. கீழத் தஞ்சையில் வங்கக் கடல் அலைக் கரங்களால் நீராட்டும் நெடிய ஊர் தான் நாகூர்.

'அப்துல் காதிருள் நாகையூர்' என்று புலவர் போற்றினுர். ஹஜ்ரத் அப்துல் காதிர் பாதுஷா நாயகம் அவர்கள் ஆட்சி செய்து கொண்டிருக்கும் ஊர் அல்லவா இது?

ஆமாம். அவர்களின் அருளாட்சி அனுதினமும் நடந்து கொண்டிருக்கிறது.

''சமரசம் உலாவும் இடம் இது. சமய, கலாசாரங்களின் சங்கமக் களம் இது. தர்காவைச் சுற்றிப் பாருங்கள்... உணர்ந்து கொள்வீர்கள்'' என்று உள்ளூர் அன்பர் ஒருவர் கூறினுர்.

நிமிர்ந்து, நெடிதுயர்ந்து நிற்கும் வெள்ளை 'மினுரா'க்கள் முதலில் நம்மைக் கவர்கின்றன. இந்து—முஸ்லிம் கட்டடக் கலை நுட்பங்களுடன் மினுராக்கள் நிமிர்ந்து நிற்கின்றன. தஞ்சை நாயக்க மன்னர்களின் செல்வாக்கும் நவாபின் செல்வாக்கும் தர்காவின் நிர்மாணத்தில், அமைப்பில் இரண்டறக் கலந்திருக்கின்றன.

தர்காவுக்கு நான்கு வாசல்கள்.

அலங்கார வாசல், தலைமாட்டு வாசல், கிழக்கு வாசல் கால்மாட்டு வாசல் ஆகியவை.

அலங்காரவாசல் அழகிய சந்நிதி.

கடைகள் நிறைந்த கலகலப்பான இடம்.

தர்காவைச் சுற்றி வருகிறோம்.

ஓரிடத்தில் புறாக்கூட்டம். எண்ண முடியவில்லை. தன்னிச்சையாகப் பறந்து திரிந்து கொண்டிருக்கின்றன.

இதற்கு விசேட காரணம் இருக்குமோ என்ற கேள்வி தோன்றுகிறது. அதை உறுதிப்படுத்துவது போல் சிலர் புறாக்களை விலை கொடுத்து வாங்கிப் பறக்க விடுகிறார்கள்.

''உங்கள் சந்தேகம் சரியானதுதான். நேர்ச்சை செய்து கொண்டவர்கள் புறாக்களை இங்கே பறக்க விடுகிறார்கள். ஷாஹுல் ஹமீது பாதுஷா நாயகம் அவர்களிடம் ஒரு சமயம் தஞ்சாவூர் மன்னர் அச்சுதப்பநாயக்கர் கொண்டுவரப்பட்டார். செய்வினை நோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார் அரசர். அவருக்கு யாரோ புறாக்களில் சூனிய வேலை செய்து வைத்திருந்தார்கள். இதை உணர்ந்த நாகூர் ஆண்டகையவர்கள், அந்தப் புறாக்களை வரவழைத்து அவற்றிலிருந்து ஊசிகளை எடுத்தார்கள். பிறகு புறாக்களைப் பறக்க விட்டுவிட்டார்கள். அரசரின் செய்வினை நோய் தீர்ந்தது. அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு நேர்ச்சையாளர்கள் புறாக்களை இங்கு பறக்கவிடுவது வழக்கமாகிவிட்டது. இந்தப் புறாக்களை யாரும் துன்புறுத்துவதோ, உணவாகக் கொள்வதோ இல்லை...'' என்று விவரித்தார் உள்ளூர் பிரமுகர் ஒருவர்.

இன்னொரு பக்கத்தில் செய்வினை நோய் தீர்ந்தவர்களைப் பற்றிய விவரங்களும், அவர்களிடமிருந்து எடுக்கப்பட்ட சூனியப் பொருட்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. நாகூர் ஆண்டகையின் கருணையினால் தனக்குக் கண் பார்வை கிடைத்த நிகழ்ச்சியை எழுதி வைத்திருக்கிறார் ஏ. கே. ராஜு என்ற பள்ளி ஆசிரியர்.

திருக்கழுக்குன்றத்தைச் சேர்ந்த அவருக்கு வயது 26. ரத்த விரியன் என்ற பாம்பு கடித்து அவனுடைய பார்வை போய்விட்டது. சிகிச்சையால் குணமடைந்த பிறகு ஒருநாள் கோழிக்கறி சாப்பிட்டதால் மீண்டும் பார்வை போய் விட்டதாம். ஒன்றே கால் ஆண்டுக்குப் பிறகு, நாகூர் சந்நிதானத்திற்கு வரும்படி அவருக்குச் சமிக்ஞை கிடைத்தது. கால் நடையாக நாகூருக்கு வந்து சேர்ந்தார் ராஜு. முற்பகல் 11 மணிக்கு நாகூர் வந்தவருக்கு மறுநாள் மாலை நாலரை மணிக்குக் கண்பார்வை கிடைத்துவிட்டது என்று எழுதி வைத்திருக்கிறார்.

''பாதுஷா நாயகம் அவர்களின் வரலாறு அற்புத பொக்கிஷம். விஞ்ஞான அறிவையும் வியக்க வைக்கும் அற்புதங்களை நிகழ்த்தியவர்கள் நம் ஆண்டகை'' என்று சொல்கிறார் தர்காவின் நிர்வாக டிரஸ்டி எஸ். சுல்தான்பாவா சாகிப்.

வரலாறு

நாகூர் நாயகம் அவர்களின் வரலாற்றைச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

மாணிக்கப்பூர் உத்தரப்பிரதேசத்திலுள்ள ஒரு கிராமம். அலகாபாத் நகரிலிருந்து 96 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள இந்தக் கிராமத்தில் நபிகள் நாயகம் அவர்களின் 23-வது தலைமுறையினராக ஹிஜ்ரி 910-ஆம் ஆண்டு (கி. பி. 1490) ஜமாத்துல் ஆகிர் மாதம் பத்தாம் நாள் வெள்ளிக்கிழமை இரவு ஷாஹுல் ஹமீது நாயகர் பிறந்தார்கள். தந்தையார் சையிது ஹசன் குத்தூஸ் அவர்கள், தாயார் சையிது பாத்திமா அவர்கள், முகியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்களின் 13-ஆம் தலைமுறையைச் சேர்ந்தவர்.

இளவயதிலேயே பேரறிவாளராகத் திகழ்ந்த ஷாஹுல் ஹமீது நாயகம், பதினெட்டு வயதுக்குள் கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்றுவிட்டார்கள். ஆன்மீக தாகம் அவர்களுக்கு ஏற்பட்டது. ஆகவே ஞான குருவைத் தேட விரும்பி, பெற்றோரின் அனுமதியைக் கேட்டார்கள். 'ஒருவன்

பேரறிஞராக இருந்தாலும் அவனுக்கு சற்குரு இருக்க வேண்டும்; குருவில்லாதவன் கண்பார்வையற்ற குருடனுக்கு சமமானவன். இம்மையில் இறைவனை அறியாதவன் மறுமையிலும் குருடனாகவே இருப்பான்' என்று பெற்றோர்களிடம் எடுத்துக் கூறினார்கள்.

பதினெட்டு வருடம் தங்களோடு வளர்ந்து, வாழ்ந்த பிள்ளையைப் பிரிவது பெருந்தொல்லை என்றாலும் புதல்வர் செல்ல விரும்பிய ஞான மார்க்கத்திற்கு பெற்றோர் தடையாக இருக்க விரும்பவில்லை.

ஷாஹுல் ஹமீது நாயகம் ஹிஜ்ரி 928-ஆம் ஆண்டு மாணிக்கப்பூரை விட்டு ஞான குருவைத் தேடி குவாலியரை நோக்கிப் புறப்பட்டார்கள். ஷெய்கு முயீனுத்தீன் என்ற நண்பர் அவர்களுக்கு வழித்துணையாக இருந்தார். செல்லும் வழியில் பல அரிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. பல பெரியார்களின் ஆசி கிடைத்தது. காட்டு வழியில் அவர்கள் சென்றபோது கொடிய விலங்குகள் பணிந்து வழி விட்டன. திருடர்களின் கூட்டம் அவர்களைச் சூழ்ந்து கொண்டது. ஆனால், ஷாஹுல் ஹமீது நாயகரின் ஆற்றலுக்கு முன் திருடர்களின் உ ாயங்கள் தோற்றன. திருடர்கள் உபதேசம் பெற்று முஸ்லிம்களாக மாறினர்.

குவாலியரில் சற்குரு, ஷைகுல் இஸ்லாம் சையிது முகம்மது கவுது அவர்களை ஷாஹுல் ஹமீது நாயகம் தேடிவந்தார்கள். தம்மிடம் ஞானதீட்சை பெற அவர்கள் வருவார்கள் என்பதை இறையருள் காரணமாக முன்கூட்டியே அறிந்த குரு, சீடர்கள் சிலருடன் சென்று ஷாஹுல் ஹமீது நாயகரை எதிர் கொண்டழைத்தார்கள். தம்முடன் தங்க வைத்து ஞான போதனைகளை வழங்கினார்கள்.

நாகூர் நாயகர் குவாலியரில் குருவுடன் பத்தாண்டு காலம் தங்கியிருந்தார்கள். மெய்யான வணக்கத்தின்படித் தரங்களை உணர்ந்து பக்குவம் பெற்றார்கள். ஆன்மீகப் பயிற்சி முடிந்ததும் அவர்களுக்குத் தங்கள் புதல்வியைத் திருமணம் செய்து வைக்க குருவின் துணைவியார் விரும்

னார். ஷாஹுல் ஹமீது நாயகத்தின் சம்மதத்தை அறிந்து வர ஆட்கள் அனுப்பப்பட்டார்கள். மணவாழ்வுக்கு அவர்கள் இசையவில்லை.

தரிசனம்

குவாலியரில் தங்கள் வணக்க அறையில் ஒருநாள் இரவு ஷாஹுல் ஹமீது நாயகம் நிஷ்டையில் ஆழ்ந்திருந்தபோது அரிய தரிசனக் காட்சிகளைப் பெற்றார்கள். நண்பர் ஷைகு முயீனுத்தீன் கேட்டபோது அவற்றை விவரித்துச் சொன்னார்கள்.

''ஞானிகளின் வழிகாட்டியான ஹிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சலாம் கூறினார்கள். அதைத் தொடர்ந்து எனக்கும் ஆத்ம உலகுக்கும் இறைவனுக்கும் குறுக்கே இருந்த திரைகள் விலகின. அப்பொழுது பூவுலகம் முழுவதும் என் முன்னே தோன்றியது. பின்னர் வானவெளியில் சென்றேன். ஏழு படித்தரங்களையுடைய இடங்களை அங்கு பார்த்தேன். ஆத்ம உலகை அடைந்து ஒவ்வொரு படித்தரமாகச் சென்று கொண்டிருந்தபோது மகாமுல் அபுராரு எனும் இடத்தில் எனக்குச் சிறப்புகள் கொடுக்கப்பட்டன. அவுலியாமார்களை அங்கு கண்டு சலாம் கூறி தரிசனம் பெற்றேன். அவர்களை ஹிலுறு அலைஹிஸ்ஸலாம் அறிமுகப் படுத்தி வைத்தார்கள்.

சுல்தானுல் ஆரிபீன் ஷைகு அபாயஜீதுல் புஸ்தாமி (ரலி), சுல்தான் இபுராகீம் இப்னு அத்ஹம், ஷைகு காஜா முயீனுத்தீன் சிஷ்தி, ஷைகு புலேல் இப்னு இயாலு (ரலி), ஷைகு மாலிக் இபுனு தீனார், ஹஸ்ரத் உவைசுல்கர்னீ, ஹஜ்ரத் ஷைகு சுபியான் தௌரி, முஹியித்தீன் இபுனுஅரபி, உமர் இபுனு அப்துல் அஜீஸ் மிஸ்ரி, ஷைகு ஜுனைதுல் பக்தாதி ஆகிய ஞான மேதைகளையும் மற்றும் பல அவுலியா மார்களையும் அங்கு கண்டதாக ஷாஹுல் ஹமீது நாயகம் கூறினார்கள்.

தொடர்ந்து சொன்னார்கள்: ''என் பாட்டனார் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்களைத் தரிசித்தேன். இறை

வன் என்னை குத்பாகவும், கவுதாகவும் தேர்ந்தெடுத்திருப்ப தாக அவர்கள் கூறி ஆசீர்வதித்தார்கள். எனக்குப் பணித்த படி இமாமாக இருந்து தொழுகை நடத்தினேன். பின்னர் அமரர்கள் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்றேன். பைத்துல் மௌமூர் எனும் பள்ளியைச் சுற்றி வந்து அமரர்களோடு உரையாடினேன். பிறகு நபிமார்கள் இருக்கும் உலகுக்குச் சென்று ஆதம் முதல் ஈசா அலைஹிஸ்ஸலாம் வரையான நபிமார்களை தரிசித்து ஆசி பெற்றேன்.''

ஷாஹுல் ஹமீது நாயகம், ஹஜ்ரத் அலி (ரலி) முதல் இமாம் கஸ்ஸாலி (ரலி) வரையான முன்னோர்களையும் தரிசித் தார்கள். பிறகு மகாமுல் மஹ்மூத் எனும் இடத்திற்குச் சென்றார்கள். அங்குதான் நபிகள் நாயகம் அவர்கள் நண்பர் கள் புடைசூழ திருக்காட்சி தந்தார்கள்.

ஷைகு முயீனுத்தீன் அவர்களிடம் நாகூர் நாயகம் மேலும் சொன்னார்கள்: ''நபிகள் திலகம் அவர்கள் என்னை ஆசீர் வதித்தார்கள். புருவங்களுக்கிடையே முத்தமிட்டார்கள். பின்னர் அடுத்த படித் தரத்திற்குச் சென்று இறைவனின் தஜல்லி என்ற ஒளியை தரிசித்தேன். அப்பொழுது என்னை கீழ்நோக்கிப் பார்க்குமாறு இறைவன் கட்டளையிட்டான். நான் பார்த்தபோது ஏழுவானங்களின் தோற்றம், உலகி லுள்ள உயிரினங்களின் நிலை, உலகின் பௌதிகத் தோற்றம், நீர் நிலைகள் முதலான அனைத்தும் எனக்குத் தெரிந்தன. அவையனைத்தும் எனக்கு வசப்படும்படி ஏவுவதாக இறைவன் கூறினான். என்னைத் தன்னுடைய மெய்யான அடிமையாக ஏற்றுக் கொண்டதாகவும் இறைவன் அறிவித்தான்.''

ஆன்மீக ஞானத்தில் பக்குவம் பெற்ற ஷாஹுல் ஹமீது நாயகம் சற்குருவைப் பிரியும் நேரம் வந்தது.

சற்குரு ஹஜ்ரத் முகம்மது கவுது அவர்கள் நாகூர் நாயகருக்கு தீட்சையளித்தார்கள், தங்களால் இயற்றப் பட்ட ஜவாஹிருல் கம்ஸா எனும் ஐந்து தத்துவங்கள் அடங் கிய நூலின் கையெழுத்துப் பிரதி ஒன்றையும் அளித்தார்கள். அத்துடன் தங்கள் போதனையால் மனம்மாறிய 400 பேரை

யும், ஷைகு முயீனுத்தீன், இபுராகீம், முகம்மது மூசன், முகம்மது ஹுசைன் ஆகியோரையும் தம்முடன் அழைத்துச் செல்லுமாறு சற்குரு சொல்ல அதன்படி ஷாஹுல் ஹமீது நாயகம் புறப்பட்டார்கள். மனம்மாறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அந்த 400 பேரும் கொள்ளைக்காரர்களாக முன்பு இருந்து வந்தவர்கள்.

பிரியாவிடை பெறும் சமயத்தில் ஹஜ்ரத் முகம்மது கவுது அவர்கள் ஷாஹுல் ஹமீது நாயகம் திருமணவிருப்பம் இல்லாதவராக இருந்தாலும், அவர்கள் மூலம் ஓர் ஆண் குழந்தை தோன்ற வேண்டியிருக்கிறது என்று கூறினார்கள். மரியம் அவர்கள் ஆண் உறவு இல்லாமல் ஈசாவைப் பெற்றெடுக்க நாடிய இறைவன் தன் விஷயத்திலும் நிறைவேற்றுவான் என்று ஷாஹுல் ஹமீது நாயகம் பதிலளித்தார்கள். சற்குரு மகிழ்ச்சியடைந்தார்கள். ஆசீர்வதித்து மாணிக்கப் பூருக்கு அனுப்பிவைத்தார்கள்.

தேச சஞ்சாரம்

பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஷாஹுல் ஹமீது நாயகம் (ஹிஜ்ரி 947ஆம் ஆண்டு) பெற்றோரை மீண்டும் மாணிக்கப்பூரில் சந்தித்தார்கள். பெருமானார் நபிகள் நாயகம் அவர்கள் வழிமுறைப்படி தமது புதல்வர் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்று தாயார் கூறியபோது, ஷாஹுல் ஹமீது நாயகம் மறுத்துவிட்டார்கள். இறைவனின் நெருக்கத்தையே விரும்புவதாகத் திட்டவட்டமாகச் சொல்லி விட்டார்கள். 404 சீடர்களோடு மாணிக்கப்பூரில் பெற்றோருடன் சிலகாலம் தங்கியிருந்துவிட்டு மக்கா யாத்திரை மேற்கொண்டார்கள்.

ஆப்கானிஸ்தான், பலுசிஸ்தான், ஈரான், (பாரசீகம்) ஆகிய நாடுகளின் வழியாகப் பயணம் மேற்கொள்ளப் பட்டது. அப்பொழுது ஈரான் காடுகளில் இருந்து வந்த ஜின் கூட்டத்திற்கு ஷாஹுல் ஹமீது நாயகம் உபதேசம் செய்தார்கள். இஸ்லாமிய நெறியை ஏற்று நடக்க ஜின் கூட்டம் சம்மதித்ததால் மார்க்க நெறி முறைகளைக் கற்றுத் தருவதற்காக சில காலம் நாகூர் நாயகம் தங்கினார்கள்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானுக்குக் கூட்டத்துடன் ஷாஹுல் ஹமீது நாயகம் சென்றார்கள். அரசர் வரவேற்று உபசரித்தார். அரசகுமாரியின் முடக்குவாத நோயை குணப்படுத்தினார்கள்.

ஈரான் கடற்கரைப் பிரதேசங்களிலும் குராஸான் பகுதியிலும் சுற்றுப்பயணம் செய்துவிட்டு, துருக்கி நாட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். அங்குள்ள தூரான் மலையில் நாற்பது நாள் தங்கி தவயோகமியற்றினார்கள். ஏற்கெனவே தவயோகத்தில் ஈடுபட்டிருந்த ஷைகு சம்சுத்தீன், ஷைகு வஜ்ஹுத்தீன் ஆகிய பெரியோர்களையும் அவருடைய தோழர்களையும் ஷாஹுல் ஹமீது நாயகம் சந்தித்தார்கள்.

அந்த நாட்டில் தீயை வணங்கிக் கொண்டிருந்த ஒரு சாரார் நாயகரின் தவவலிமையைச் சோதிக்க எண்ணினார்கள். அடக்கம் செய்யப்பட்ட ஒரு சிறுவனை உயிர்ப்பித்துத் தரமுடியுமா என்று சவால் விட்டார்கள். நாயகர் அந்தச் சிறுவனை உயிருடன் எழுப்பினார்கள். அந்தக் கூட்டம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது.

துருக்கியிலுள்ள ஜபலுல் ஔலியா எனும் மலைக்குச் சென்று நாற்பது நாட்கள் தங்கியிருந்தார்கள். அங்கு நிஷ்டையில் ஈடுபட்டிருந்த ஒரு பெரியாரின் உபதேசங்களை ஷாஹுல் ஹமீது நாயகம் பெற்றார்கள்.

இந்த மலையில் இருந்தபோது தான் தமது தந்தையாரின் ஜீவியம் முடியப் போவதை ஷாஹுல் ஹமீது நாயகம் உணர்ந்தார்கள். நிஷ்டையின்போது அது அவர்களுக்குத் தெரியவந்தது. தந்தையாரின் உயிர் பிரியும் சமயத்தில் தாம் பக்கத்தில் இருக்கவேண்டும் என்று விரும்பிய நாகூர் நாயகம் அங்கிருந்து மாணிக்கப்பூரை நோக்கிப் புறப்பட்டார்கள்.

ஞானமேதையான மகனை பார்த்த பிறகே தந்தையார் சையிது ஹசன் குத்தூஸ் அவர்கள் காலமானார்கள். தந்தையார் மறைந்த ஐந்தாம் நாளில் தாயார் ஹஜ்ரத் பாத்திமா அவர்களும் உயிர் துறந்தார்கள். ஷாஹுல் ஹமீது நாயகம்

நாற்பது நாட்கள் மாணிக்கப்பூரில் தங்கியிருந்தார்கள். மீண்டும் தங்கள் சகாக்கள் 404 பேருடன் நாயகர் பயணத்தைத் தொடங்கினார்கள். கன்ஜூப்பூர் மாநிலத்தில் சிறிது காலம் தங்கினார்கள். பிறகு சீன நாட்டிற்குச் சென்றார்கள். அங்கு சில அற்புதங்களை நிகழ்த்தி அங்கு வாழ்ந்த தாத்தாரிய மக்களை இஸ்லாத்தில் இணைத்தார்கள். பிறகு வட இந்தியக் காடுகளில் சஞ்சாரம் மேற்கொள்ளப்பட்டது. அப்பொழுது ஷீயா பிரிவைச் சேர்ந்த பலரை சுன்னத் ஜமாஅத்தில் இணையச் செய்தார்கள்.

ஷாஹூல் ஹமீது நாயகம் குழுவுடன் பஞ்சாப் வந்து சேர்ந்தார்கள். லாகூரில் தங்கியிருந்தபோது அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் வழித் தோன்றலான அறிஞர் ஷைகு நூருத்தீனும் அவருடைய துணைவி ஜொஹ்ரா அம்மையாரும் தங்களுக்கு மக்கட்செல்வம் இல்லாத குறையைத் தெரிவித்தனர். ஷாஹூல் ஹமீது நாயகம் தாம்பூலத்தை மென்றெடுத்து ஷைகு நூருத்தீன் அவர்களிடம் தந்து அவர் மனைவியாரை உட்கொள்ளும்படிச் சொன்னார்கள். அதன் மூலம் அவர்களுக்கு ஆண் குழந்தைகள் நால்வரும், பெண் குழந்தைகள் சிலரும் பிறப்பார்கள் என்று கூறினார்கள்,

தலைக்குழந்தைக்கு முகம்மது யூசுப் என்று பெயர் சூட்டி வளர்த்து தங்களிடம் ஒப்படைத்து விடவேண்டும் என்று தெரிவித்தார்கள். பின்னர் சிந்து பிரதேசத்தில் பயணம் செய்தார்கள். அப்பொழுது மக்களை நடுநடுங்க வைத்துக் கொண்டிருந்த கெட்ட தேவதைகள் வாழ்ந்த கோவிலில் ஷாஹூல் ஹமீது நாயகம் தங்கினார்கள். இதைக் கண்ட மக்கள் வியப்படைந்தார்கள். ஞானமேதை அவர்களின் ஆற்றலை உணர்ந்து கொண்டனர். நாகூர் நாயகம் அவர்களின் நல்லுபதேசங்களைக் கேட்டு முஸ்லிம்களாயினர்.

அங்கிருந்து கவுன் என்ற மலைப்பகுதிக்குச் சென்று சன்மார்க்கம் போதித்தார்கள். குடகு நாட்டில் பல அற்புதங்களை நிகழ்த்தினார்கள்.

பால நாயகர்

பின்னர் அஜ்மீர் நகருக்கு ஷாஹுல் ஹமீது நாயகம் வந்து சேர்ந்தார்கள். ஹஜ்ரத் காஜா முயீனுத்தீன் சிஷ்தி அவர்கள் சமாதி கொண்டுள்ள அந்தத் திருத்தலத் தரிசனத்தை முடித்துக் கொண்டு நிஷ்டை புரிந்தார்கள். மூன்று நாள் நிஷ்டை மேற்கொண்டு ஹஜ்ரத் காஜா முயீனுத்தீன் சிஷ்தி அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு மேற்கு கடற்கரையை நோக்கி வந்தார்கள். அங்கு கப்பலேறி அரேபிய நாட்டின் துறைமுகமான ஜித்தாவுக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஜித்தாவில் சில காலம் தங்கிவிட்டு திருமக்கா நகருக்கு வந்து கஃபா ஆலயத்தை ஷாஹுல் ஹமீது நாயகம் தரிசித்தார்கள். பின்னர் குழுவுடன் மதீனு நகருக்கு வந்து, தங்கள் பாட்டனூர் நபிபெருமானூர் அவர்களின் ரவுலாஷரீபை தரிசித்தார்கள். 'மீண்டும் மக்கா நகருக்குத் திரும்பி கஃபாவில் தங்கினூர்கள்.

ஹிஜ்ரி 960 ரஜப் மாதம் பத்தாம் நாள், லாகூரில் ஷைகு நூருத்தீன் முப்தி தம்பதிக்கு தங்கள் காரணப் புதல்வராகப் பிறந்த பாலநாயகர் சையிது முகம்மது யூசுப் அவர்கள், தங்களைக்காண மக்கா நகர் நோக்கி வருவதை நிஷ்டை மூலம் ஷாஹுல் ஹமீது நாயகம் உணர்ந்தனர். ஏழு வயது பாலகரான காரணப் புதல்வர் முகம்மது யூசுப் ஸன்ஆன் நகருக்கு வந்து சேர்ந்ததை அறிந்த நாயகர், தங்கள் தோழர் ஷைகு முயீனுத்தீனையும், ஷைகுஇபுராகீமையும் ஸன்ஆனுக்கு அனுப்பி பாலநாயகரை அழைத்து வரச் செய்தார்கள். காரணப் புதல்வரைத் தங்களுடன் அமர்த்திக் கொண்டு கல்வி கேள்வி ஞானங்களைப் புகட்டினூர்கள்.

ஷாஹுல் ஹமீது நாயகரின் பயணம் தொடர்ந்தது. எமன், ரூம், ஈராக் ஆகிய நாடுகளுக்குச் சென்ருர்கள். மதீனு நகருக்கு மறுமுறையும் வந்தார்கள். பதுறு, உஹது போர்க்களங்களில் தங்கினூர்கள். நஜபுக்குச் சென்று நூஹுநபி அவர்களின் சமாதியையும், அலீ (ரலி) அவர்

களின் சமாதியையும் தரிசனம் செய்தார்கள். மூசா நபிக்கு இறைவன் திருக்காட்சியளித்த தூர்சீனா மலைச் சிகரத்திற்கும் சென்றார்கள். அங்கு நாற்பது நாள் தங்கிவிட்டு சிரியா (ஷாம்) நாட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஸன்ஆன் நகரில் நபி இபுராகீம் அவர்களின் சமாதியை தரிசித்தார்கள். இஸ்மாயீல் நபி, இஸ்ஹாக் நபி, யாகூப் நபி, யூசுப் நபி, ஆகிய இறை தூதர்களின் சமாதிகளையும் தரிசித்து விட்டு ஜெருசலத்திற்கு ஷாஹுல் ஹமீது நாயகம் வந்து சேர்ந்தார்கள். அங்குள்ள புனித இறையில்லத்தில் தங்கினார்கள். அங்கு தாவூத் நபி, ஜகரிய்யா நபி, எஹ்யா நபி, அன்னை மரியம் ஆகியோரின் அடக்க ஸ்தலங்களை தரிசித்தார்கள். ஈசா நபி அவர்கள் வணக்கத்தில் ஈடுபட்டிருந்த இடத்தையும் தரிசனம் செய்தார்கள்.

பின்னர் ரூம் நாட்டில் சஞ்சாரம் மேற்கொண்டார்கள். தொடர்ந்து ப்ாக்தாத் பயணம். அங்கு இமாம் அபூஹனிபா, ஹஜ்ரத் முஹியித்தீன் அப்துல் காதர் ஜீலானி ஆகியோரின் திருத்தலங்களை நாகூர் நாயகர் தரிசித்தார்கள். நிஷ்டையில் ஈடுபட்டார்கள். பிறகு கர்பலா களத்திற்குச் சென்றார்கள்.

ஷாஹுல் ஹமீது நாயகம் ஒன்பதாண்டு காலம் அரேபியாவிலும் சுற்றியுள்ள நாடுகளிலும் சஞ்சாரம் செய்துவிட்டு குழுவினருடன் ஜித்தா துறைமுகத்தில் கப்பலேறினார்கள். அப்பொழுது பால நாயகர் ஹஜ்ரத் முகம்மது யூசுப் சாகிப் அவர்களுக்கு வயது பதினாறு.

தென்னகத்தில்

கேரளத்தை நோக்கிப் பயணமானார்கள். வழியில் கடற் கொள்ளையர்கள் மறித்தார்கள். ஆனால் நாயகர் அவர்களை அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. மலபாரிலுள்ள பொன்னானிக்குக் கப்பல் வந்து சேர்ந்தது. சையிது ஜைனுத்தீன் மகுதூம் என்ற செல்வரால் அவர்கள் வரவேற்கப் பட்டார்கள். அவருடைய தோட்டத்திலேயே நாயகரும் மற்றவர்களும் தங்கியிருந்தார்கள். தமது புதல்வியை ஷாஹுல் ஹமீது நாயகம் மணந்து கொள்ளவேண்டும்

என்று ஸைஸயிது ஜைனுத்தீன் மருதூம் கேட்டுக் கொண்டார். நாயகர் சம்மதிக்கவில்லை.

பின்னர் முஹல்லத்தீவுக்குச் சென்றார்கள்.

அந்தத் தீவில் பல அற்புதங்களை நிகழ்த்தினார்கள். அதன் விளைவாக இஸ்லாம் அங்கே பரவியது.

தொடர்ந்து இலங்கை யாத்திரை மேற்கொண்டார்கள். காலி நகரிலும், ஆதம் மலையிலும் சிலகாலம் தங்கியிருந் தார்கள்.

அங்கிருந்து ஷாஹுல் ஹமீது நாயகத்தின் தமிழகப் பயணம் துவங்கியது. பாம்பன் வழியாக தமிழ் நாட்டிற்கு வந்து முதலில் காயல்பட்டினத்திற்கு வருகை புரிந்தார்கள், அந்நகரத்தைச் சேர்ந்த செல்வரான அப்துல் கப்பார் தனது புதல்வியை மணமுடித்துக் கொள்ளுமாறு வேண்ட, மறுத்து விட்டார்கள்,

அடுத்து கீழக்கரை விஜயம். பட்டணமாரி என்ற ஊரில் குழுவுடன் தங்கினார்கள். மேலப்பாளையத்தில் முகாமிட்டார் கள். பிறகு தென்காசிக்குப் பயணம். அவர்களின் வருகை யால் வரண்டு வானம் பார்த்திருந்த அவ்வூரில் மழைபெய்து வளம் ஏற்பட்டது. நத்தத்திற்கு வந்தார்கள். ஆயக்குடியில் தங்கினார்கள். பொதிய மலைக்கு வருகை புரிந்தார்கள். சென்ற இடமெல்லாம் சன்மார்க்க நெறியைப் பரப்பி னார்கள்.

திருச்சியை நோக்கி ஷாஹுல் ஹமீது நாயகம் வந்தார் கள். அங்கு சமாதி கொண்டுள்ள தப்லே ஆலம் பாதுஷா நத்ஹர் வலி அவர்களின் ஆன்ம தரிசனத்தைப் பெற்று தஞ்சாவூருக்குப் புறப்பட்டார்கள். அச்சுதப்ப நாயக்கர் எனும் மன்னர் அப்பொழுது தஞ்சையை ஆண்டு வந்தார். ஆனால், தீராத நோயில் விழுந்திருந்தார் அவர். செய்வினை. கோளாறினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த அரசர் ஞான மேதை ஷாஹுல் ஹமீது நாயகரின் வருகையை அறிந்து அவர்களை அரண்மனைக்கு அழைத்துவருமாறு அமைச்சர் முதலானவர்களை அனுப்பி வைத்தார்.

அரசரின் அழைப்பை ஏற்று அரண்மனைக்கு வந்தார்கள் நாகூர் நாயகம். அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு அச்சுதப்ப நாயக்கர் கொண்டுவரப்பட்டார். வழிபாட்டின் மூலம் தஞ்சை அரசனின் பிணியை முற்றாகப் போக்கிவைத்தார்கள்.

நோய் நீங்கிய மகிழ்ச்சியில் மிக உயர்ந்த அன்பளிப்பு மரியாதைகளைச் செய்ய அரசர் முன்வந்தபோது ஷாஹுல் ஹமீது நாயகம் நிராகரித்துவிட்டார்கள். தேவையான நேரத்தில் ஒரு சிறு நிலப்பகுதியைக் கேட்டு வாங்கிக் கொள்வதாக அவர்கள் கூறிவிட்டார்கள்.

தங்களுக்கு மக்கட்செல்வம் இல்லை என்று அரசி முறையிட இறையருளால் அந்தக் குறை நீங்கும் என்று நாகூர் நாயகம் கூறினார்கள். அவ்வாறே அரச தம்பதிக்குப் பிள்ளைச் செல்வம் ஏற்பட்டது.

தஞ்சையிலிருந்து பண்டாரவாடை, கூத்தாநல்லூர் ஆகிய ஊர்களுக்கு ஷாஹுல் ஹமீது நாயகம் வந்தார்கள்.

திருவாரூர் விஜயம். அன்று தேர்த் திருவிழா நாள். அலங்காரத் தேரினை பக்தர்கள் இழுக்க முயன்றார்கள். தேர் நகரவில்லை. ஒரு முஸ்லிம் மகான் திருவாரூருக்கு வந்திருப்பதால் அவர்களிடம் சென்று யோசனை கேட்கலாம் என பிரமுகர்கள் முடிவு செய்தார்கள். அதன்படி ஷாஹுல் ஹமீது நாயகரிடம் அவர்கள் வர, மீண்டும் தேரை இழுக்கச் சொன்னார்கள். அதற்குப் பிறகு தேர்த் திருவிழா தடையின்றி நடைபெற்றது.

நாகூர் வருகை

திருவாரூரைவிட்டு திருக்களாச்சேரிக்கு வந்து அங்கிருந்து மேலநாகூர் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது அங்கு வாழ்ந்த மக்கள் செல்வசுகத்தில் திளைத்துஅறநெறிகளை மறந்திருந்தார்கள். அவர்களுக்கு ஷாஹுல் ஹமீது நாயகம் உபதேசங்கள் புரிந்தும் மக்கள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. மாறாக நாயகர் அவர்களைப் பரிகாசம் செய்தார்கள். இறைவனின் சினம் காரணமாக அங்கு காலரா நோய் ஏற்

பட்டது. பிணிகள் தோன்றின. பல குடும்பங்கள் அழிவுக்கு இலக்காயின.

இதற்குப் பிறகு ஷாஹுல் ஹமீது நாயகம் நாகூர் கடற் கரையோரத்தில் காட்டுப் பகுதியும் மணற் குன்றுமாக இருந்த இடத்தில் தங்கினார்கள். தஞ்சாவூர் அரசர் அச்சுதப்ப நாயக்கர் இச்செய்தியை அறிந்து நாகூருக்கு வந்தார். நாகூர் நாயகருக்குத் தேவையான வசதிகளைச் செய்துதர முன் வந்தார். தாங்கள் குழுவுடன் தங்குவதற்குப் போது மான இடத்தை ஒதுக்கித் தந்தால் போதும் என்று நாயகர் சொல்ல, சுமார் 30 வேலி (200 ஏக்கர்) நிலத்தை அச்சுதப்ப நாயக்கர் மானியமாக அளித்தார், இன்றைய நாகூர் இருக் கும் நிலப்பரப்பே அது.

இந்தச் சமயத்தில் ஷாஹுல் ஹமீது நாயகத்தின் வயது 44. பாலநாயகருக்கு 21 வயது. தங்கள் இறுதிக் காலம் வரை ஷாஹுல் ஹமீது நாயகம் நாகூரிலேயே தங்கவேண்டும் என்ற இறை எண்ணம் அவர்களுக்கு ஹிலுறு அலைஹிஸ் ஸலாம் மூலம் அறிவிக்கப்பட்டது. பாலநாயகருக்குத் திருமணம் செய்து வைக்க ஷாஹுல் ஹமீது நாயகம் விரும்பி னார்கள். நாகூர் சையிது காஜா மகுதூம் அவர்களின் புதல்வி சுல்தான் பீவியை மணம் செய்து வைக்க நிச்சயமாயிற்று. அந்தத் தருணத்தில் நாகப்பட்டினத்திலிருந்து ஜாவா தீவுகளைச் சேர்ந்த பத்தாவியாவுக்கு ஒரு கப்பல் பயணமாக விருந்ததால், நாகூர் நாயகம் அவர்கள் காரணப் புதல்வர் ஹஜ்ரத் முகம்மது யூசுப் சாகிப் அவர்களை நாகூரிலேயே இருக்கச் செய்து விட்டு கப்பலேறினார்கள்.

பத்தாவியா செல்ல வேண்டிய கப்பல் தற்செயலாக பர்மாவிலுள்ள மோல்மீன் பகுதிக்கு வந்து சேர்ந்தது. ஷாஹுல் ஹமீது நாயகம் அங்கேயே தர்ஹாசாரியில் இறங்கிக் கொண்டார்கள். அங்கு மக்களின் நோய் நொடிகளை குணப் படுத்தினார்கள். அரசரின் பிணியை நீக்கினார்கள். சன் மார்க்கப் பணியில் ஈடுபட்டார்கள். பர்மாவைவிட்டு அவர் கள் எங்கும் செல்லக்கூடாது என்று அனைவரும் அன்புக் கட்டளையிட்டார்கள். ஆகவே, அவர்களைத் திருப்திபடுத்தும்

விதத்தில் அங்கு சமாதியாகி அன்றே நாகூருக்கு வந்தார்கள். முன்பே நிச்சயிக்கப்பட்டிருந்த பாலநாயகரின் திருமணத்தை இப்பொழுது அவர்கள் நடத்தி வைத்தார்கள்.

மறைவு

ஹிஜ்ரி 978ஆம் ஆண்டு (கி. பி. 1558) ஜமாதுல் ஆகிர் மாதம் பத்தாம் நாள் வெள்ளிக்கிழமை இரவு ஷாஹுல் ஹமீது நாயகம் இவ்வுலக வாழ்வை நீத்தார்கள். அவர்களின் மறைவுக்குப் பிறகு சீடர்கள் 404 பேரும் காரணப் புதல்வர் பாலநாயகர் ஹஜ்ரத் யூசுப் சாகிப் அவர்களிடம் விடைபெற்று வெவ்வேறு பகுதிகளுக்குப் பிரிந்து சென்றார்கள். சன்மார்க்கப் பணி புரிவதே அவர்களின் நோக்கம். அவர்கள் பான்வா, மலங்கு, மதாரி, ஜலாலி என நான்கு வகுப்பாகப் பிரிந்தார்கள். ஆண்டுதோறும் ஷாஹுல் ஹமீது நாயகரின் கந்தூரி நாகூர் நகரில் நடைபெறும்போது சந்திக்கலாம் என்று ஓர் ஏற்பாட்டைச் செய்து கொண்டனர். முதலாவது கந்தூரி விழா ஹிஜ்ரி 979ஆம் ஆண்டு (கி. பி. 1559) கொண்டாடப்பட்டது. தொடர்ந்து ஆண்டுதோறும் ஜமாதுல் ஆகிர் முதல் பிறையிலிருந்து பத்தாம் நாள்வரை கந்தூரி கொண்டாடப்பட்டு வருகிறது.

நாகூர் நாயகம் 68 ஆண்டுகள் வாழ்ந்தார்கள். பெற்றோருடன் வாழ்ந்த காலம் முதல் பதினெட்டு ஆண்டுகள். குவாலியரில் சற்குரு சையிது முகம்மது கவுது அவர்களுடன் பத்து வருடம் தங்கியிருந்தார்கள், பல நாடுகளிலும் பன்னிரண்டு வருடகாலம் சஞ்சாரம் செய்தார்கள். நாகூரில் அவர்கள் நிலையாகத் தங்கி வாழ்ந்த காலம் இருபத்தெட்டு ஆண்டுகள்.

நாகூர் நாயகருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சையிது அப்துல் காதிர். பல்வேறு சமயங்களில் அவர்களுக்கு பல சிறப்புப் பெயர்கள் வழங்கப்பட்டன. எல்லாப் பெயர்களையும் சேர்த்து நாயகர் அவர்களை அழைக்கும் வழக்கம் பின்னர் ஏற்பட்டது.

சுல்தானுல் அவுலியா, குத்புல் அக்தாபு, கல்துல் இஸ்லாம் மீரான், சுல்தான், சையிது அப்துல்காதிர், ஷாஹுல் ஹமீது, கன்ஜ சவாய், கன்ஜபக்ஷ் பாதுஷா சாகிப் என்ற பெயர்களுக்குரியவர்களாக ஆண்டகை அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அற்புதங்கள்

நாகூர் நாயகம் நிகழ்த்திய அற்புதங்கள் எண்ணற்றவை. மனித ஆற்றலுக்கு மீறிய இயற்கை இறந்த செயல்களை 'கராமத்' என்கிறோம். அவசியம் ஏற்பட்ட போதெல்லாம் ஷாஹுல் ஹமீது ஆண்டகை அத்தகைய கராமத்துகளை நிகழ்த்தினார்கள். அவை நாடறிந்தவை.

ஷாஹுல் ஹமீது நாயகம் நிகழ்த்திய சில அற்புதங்களை எண்ணிப் பார்க்கலாம்.

மகுதூம் முகம்மதுப் புலவர் பாடுகிறார்.

''கடலினொரு துண்டுடைந் திடு கப்பலைக் கையின்
கண்ணாடி கொண்டு காத்தீர்
கரவுசெய் மரக்கலத் தோரரமெழு கதனில்வெடி
காட்டிவென் றீர் கன்னியைத்
திடமுட னழிக்கவரு பொல்லாத ஜின்னினைத்
திசைபுகழவே ஜெயித்தீர்
தீராத நோயினர்கள் நோயினை யகற்றினீர்
செவிடு குருடோடு மலடு
முடமிவைகள் போற்பலவு நீக்கிநல மாக்கினீர்!''

'கப்பலைக் கையின் கண்ணாடி கொண்டு காத்த நிகழ்ச்சி வருமாறு:

ஷாஹுல் ஹமீது ஆண்டகையவர்கள், நாகூர் கடற்கரையில் வழக்கமாகத் தவமிருக்கும் இடத்தில் அமர்ந்திருந்தார்கள். முடிதிருத்துபவர் நாயகரின் முகத்தை மழித்துக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் தொலைவில் கடற்பரப்பில் ஒரு கப்பல் காணப்பட்டது. ஹாலந்து நாட்டைச் சேர்ந்த அந்தக் கப்பலில் உடைப்பு ஏற்பட்டு கடல்நீர் உள்ளே ஏறிக் கொண்டிருந்தது. கப்பல் ஊழியர்கள் தண்ணீர்ப் பிரவாகத்தைக் கட்டுப்படுத்த பெரும் பாடுபட்டார்கள். பலன் இல்லை. மூழ்கும் அபாயத்திலிருந்து எப்படியாவது தப்ப வேண்டும் என்று கப்பலில் இருந்தவர்கள் துடித்தார்கள். நாகூர் நாயகம் அவர்களின் மாண்பை உணர்ந்திருந்த ஒருவர், அவர்களை மனத்தால் நினைத்து காசுகளைத் துணியில் முடிந்து பாய்மரத்தில் கட்டி கப்பலை அவர்கள் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

நாகூர்நாயகம் அவர்கள் இதை உணர்ந்தார்கள், தங்கள் கையில் வைத்திருந்த முடிதிருத்துபவரின் கண்ணாடியை ஆண்டகையவர்கள் கடலில் வீசிஎறிந்தார்கள். அந்தக் கண்ணாடி கப்பலில் ஏற்பட்ட ஓட்டையை அடைத்து விட்டது. உள்ளே புகுந்த கடல் நீர் இறைக்கப்பட்டு அந்தக் கப்பல் நாகப்பட்டினம் வந்து சேர்ந்தது. கண்ணாடி போய் விட்டதே என்று கவலைப்பட்ட முடிதிருத்துபவருக்கு அது திரும்பக் கிடைக்கும் என்று நாகூர் நாயகம் சொன்னார்கள். கண்ணாடியை காணிக்கைப் பொருட்களுடன் கப்பல் குழுவினர் அனுப்பி வைத்தார்கள்.

இந்தச் செய்தி நாகப்பட்டினத்தில் கோட்டை கொத்தளங்களுடன் வாழ்ந்து வந்த ஹாலந்து நாட்டினருக்கு (டச்சுக்காரர்கள்) எட்டியது. அவர்கள் நம்பவில்லை. ஹாலந்து நாட்டிலிருந்து கிராம்புக் கொடியை வரவழைத்து காட்டினால் தான், தங்களால் நாகூர் நாயகரின் ஆற்றலை நம்பமுடியும் என்று டச்சுக்காரர்கள் கூறினார்கள். ஆண்டகை அவர்கள் அவ்வாறே செய்தார்கள்.

மற்றொரு சமயம் வெளியே சென்றுவிட்டுத் திரும்பிய ஆண்டகையின் சட்டைக்கை ஈரமாகியிருந்தது. அதைக் கவனித்த காரணப்புதல்வர் ஹஜ்ரத் முகம்மது யூசுப் சாகிப் அவர்கள் விசாரித்தார்கள். அப்புறம் சொல்வதாக நாகூர் நாயகம் சொல்லிவிட்டார்கள்.

சில நாட்களுக்குப்பிறகு சிலர் குழுவாக வந்து ஆண்டகையைப் பணிந்து போற்றினார்கள். தரைதட்டிய தங்கள் கப்பலை கைகொடுத்துத் தள்ளிவிட்டுக் காப்பாற்றியதற்கு அவர்கள் நன்றி சொன்னார்கள். ஆண்டகையின் சட்டைக் கை ஈரமாகி யிருந்தது ஏன் என்பதை இப்போது பாலநாயகர் அறிந்து கொண்டார்கள்.

'கரவு செய்மரக்கலத்தோரை மெழுகதனில் வெடி காட்டி வென்ற' நிகழ்ச்சியைப் பார்க்கலாம்.

ஷாஹுல் ஹமீது நாயகம் மக்காவிலும் மற்ற பிரதேசங்களிலும் ஒன்பதாண்டுகாலம் இருந்துவிட்டு தென்னிந்தியாவை நோக்கி கப்பலில் வந்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது கடற்கொள்ளைக்காரர்கள் தொடர்ந்து வந்தார்கள். கொள்ளையர்களின் கப்பலில் பீரங்கி வைக்கப்பட்டிருந்தது. இதையறிந்ததும் கப்பலில் இருந்தவர்கள் அச்சமும் பீதியும் அடைந்தார்கள்.

ஆண்டகை அவர்கள் கலங்கவில்லை. அவர்களின் கப்பலில் மெழுகு இருந்தது. அந்த மெழுகினால் பீரங்கிபோல் உருவமைத்து மெழுகுக் குண்டுகளும் தயாரித்து இறைவனை நினைத்தபடி கொள்ளையர் கப்பல் மீது சுட்டால் அவர்கள் அழிந்துபோவார்கள் என்று நாகூர் நாயகம் சொல்ல அவ்வாறே செய்யப்பட்டது.

மெழுகு பீரங்கியிலிருந்து புறப்பட்ட மெழுகு குண்டுகள் தீக்குண்டுகளாக மாறி கொள்ளைக்காரர்களின் கப்பலில் பாய்ந்து மூழ்கடித்தன.

'அழிக்க வந்த ஜின்னை ஜெயித்த' நிகழ்ச்சி முஹல்லத் தீவில் நடந்தது.

நாகூர் ஆண்டகை அவர்கள் முஹல்லத்தீவுக்குக் குழுவுடன் வந்துசேர்ந்தபோது ஒரு கன்னிப் பெண் மணப்பெண்ணைப் போல அலங்கரிக்கப்பட்டிருந்ததையும், மற்ற சிலர் அவளைப் பார்த்து அழுவதையும் கண்டார்கள். அவர்கள் விவரம் கோரியபோது விளக்கம் சொல்லப்பட்டது.

அங்குள்ள ஒரு கோயிலுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஜின்—தேவதை—வருவதுண்டு. அப்பொழுது ஒரு கன்னிப் பெண்ணை அதற்காகப் பலிகொடுக்க வேண்டும். அப்படிச் செய்யத் தவறினல் ஜின் அந்த மக்களை அழித்து விடும் என்று நாயகர் அவர்களிடம் சொல்லப்பட்டது.

அந்த மக்களை ஆண்டகையவர்கள் அமைதிப் படுத்தினார் கள். ஜின்னை தாங்கள் பார்த்துக்கொள்வதாகவும், அதே சமயத்தில் அலங்கரிக்கப்பட்ட கன்னிப்பெண்ணுக்கு திரு மணம் செய்து வைக்கும்படியும் அவர்களிடம் சொன்னார்கள். ஆனால் அந்த மக்கள் செவிசாய்க்காமல் பலி கொடுப்பதற் காகக் கன்னிப் பெண்ணைக் கோயிலுக்குக் கூட்டிச் சென் றார்கள்.

நள்ளிரவில் ஆண்டகையவர்கள் அந்தக் கோயிலை நோக்கிச் சென்றார்கள். ஜின் கோரவடிவில் எதிரே காணப் பட்டது, கன்னிப் பெண் பயங்கரமாக ஓலமிட்டாள். ஆண்டகையவர்கள் அணுகி வந்ததும் அந்த ஜின் அடங்கி நின்றுவிட்டது.

விடிந்தபோது மக்களுக்கு வியப்பு காத்திருந்தது. கன்னிப் பெண்ணை ஜின் காவு கொள்ளவில்லை அவள் வாயாலேயே நிகழ்ந்ததைக் கேட்டு மக்கள் வியந்தார்கள். நாகூர் நாயகத்தைப் போற்றிப் பணிந்தார்கள்.

ஆண்டகையவர்கள் புரிந்த அற்புதங்களுக்கு அளவில்லை. தீராத நோயாளிகள் முறையிட்டபோது அவர்களின் நோய் களை இறைவனின் அருள் கொண்டு தீர்த்து வைத்தார்கள். செவிடர்கள், குருடர்கள், மூடமானவர்கள் குணம்பெற்றார் கள். அவர்களின் ஆன்மீக மருத்துவத்தினால்.

தர்கா ஷரீபில்

தர்கா ஷரீபை மீண்டும் வலம் வருகிறோம்.

எந்த நேரத்திலும் மக்கள் கூட்டம். அதிகாலை நாலரை மணிக்குக் கதவு திறக்கப்படுவதிலிருந்து நாளெல்லாம் மக்கள் வந்தவண்ணம் இருக்கிறார்கள். நேர்ச்சையின் பேரில்

நாள் கணக்கில் தர்காவில் தங்கிப் போகிறவர்கள் மிகுதி. முடியெடுத்துக் கொள்வதற்காக வருபவர்களும் நேர்ச்சையை நிறைவேற்ற வருபவர்களும் ஏராளம். முஸ்லிம் அல்லாதவர் கள் ஆயிரக்கணக்கில் வந்து போகிறார்கள்.

தர்காவுக்கு இந்து சமய அன்பர்களின் உபயம் அதிகம். ஆண்டகை அவர்களின் திருச்சமாதிமீது போர்த்தப்பட்டுள்ள போர்வைகூட ஓர் இந்து அன்பரின் உபயமே. நாகூர் வள்ளலின் அற்புத ஆசியினால் செல்வ வளம் பெற்ற சென்னை வர்த்தகர் பழனியாண்டிப்பிள்ளையின் குடும்பத்தினரால் ஆண்டுதோறும் இந்தப் போர்வை போர்த்தப்படுகிறது.

பெருவணிகராக விளங்கிய பழனியாண்டிப்பிள்ளையின் தொழில் பாதிக்கப்பட்டு பெருமளவு நட்டமடைந்தார். லட்சக்கணக்கான ரூபாய் கடன்பட்டார். மீட்சி பெறும் வழியறியாது கலங்கிய அவர் நாகூர் நாயகரின் உதவியை நாடி தர்காவுக்கு வந்தார். கால்மாட்டு வாயிலில் மூன்று நாட்கள் அமர்ந்திருந்து முறையீடு செய்தார். பலன் பெற்றார்.

கடன் துன்பத்தை போக்கிய கருணை நாயகருக்குக் காணிக்கை செலுத்த விரும்பிய பழனியாண்டிப் பிள்ளை ஆண்டு தோறும் திருச்சமாதிக்குப் பொன்னாடைப் போர்த்தும் வாய்ப்பைப் பெற்றார். அவருடைய குடும்பத் தினர் அந்தப் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். பழனியாண்டிப்பிள்ளை மூன்று சத்திரங்களையும் நாகூரில் கட்டியிருக்கிறார். தனக்கு ஏற்பட்டிருந்த 19 லட்ச ரூபாய் கடனை பாதுஷா நாயகம் தீர்த்து வைத்ததன் நினைவாக தர்காவின் 19 வாசற் கதவுகளையும் அவர் அமைத்தார்.

திருமலைச் செட்டி என்ற செல்வர் அளித்த பொருட்களைக் கொண்டு தர்காவின் பல பகுதிகள் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

தர்காவின் நெடிதுயர்ந்த ஐந்து மினாராக்களையும் கட்டிய வர்கள் ஐந்து பேர். முதல் மினாராவைக் கட்டியவர் செஞ்சியைச் சேர்ந்த இப்ராகீம்கான். 'சாகிபு மினாரா'

என்று அழைக்கப்படும் இதன் உயரம் 77 அடி. நாயகர் மறைந்த 77-ஆம் ஆண்டில் இது கட்டப்பட்டது. பிறகு ஒரு மண்டபமும் கட்டப்பட்டது. நடு மண்டபம் என்று அது அழைக்கப்பட்டு வருகிறது.

இரண்டாவது மினுராவைக் கட்டியவர் நாகையைச் சேர்ந்த நல்ல சயீது மரைக்காயர். ஏற்றுமதி வர்த்தகரான அவருடைய வேண்டுதல் நிறைவேறியதை யொட்டி 'தலைமாட்டு மினுரா' என்று அழைக்கப்படும் இதனைக் கட்டினார். உயரம் 93 அடி ஆண்டகை மறைந்த 122 ஆண்டு களுக்குப் பின் இது கட்டி முடிக்கப்பட்டது.

மூன்றுவது மினுராவின் பெயர் 'முதுபக்' மினுரா. மலாக்காவில் வாழ்ந்து வந்த பீர் நயினார், நல்ல சயீது மரைக்காயரின் யோசனையின் பேரில் இதனைக் காட்டினார். ஆண்டகை மறைந்த 132ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்த மினுராவின் உயரம் 93 அடி.

நான்காவது மினுரா 'ஓட்டு மினுரா' என்று அழைக்கப் கிறது. இதைக் கட்டியவர் நீதிபதியாக பரங்கிப் பேட்டை யில் இருந்துவந்த தாவூத் கான். நாகூர் வள்ளல் மறைந்த 150ஆம் ஆண்டில் இந்த மினுரா கட்டி முடிக்கப்பட்டது. உயரம் 80அடி.

ஐந்தாவது மினுரா மிகவும் உயரமானது. உயரம் 131 அடி. கட்டியவர் தஞ்சையை ஆண்டுவந்த பிரதாப் சிங் எனும் அரசர், இதற்கு ஒரு பின்னணி உண்டு. பிரதாப் சிங் பிள்ளைப்பேறு இல்லாமல் இருந்து வந்தார். தனக்கு நாகூர் நாயகர் ஆசியினுல் ஒரு புதல்வன் பிறந்தால் மானியங்களை வழங்கிக் காணிக்கை செலுத்துவதாக நேர்ச்சை செய்து கொண்டார். மறு ஆண்டே அரசருககுக் குழந்தைச் செல்வம் ஏற்பட்டது. மகிழ்ச்சிப் பெருக்கினுல் நன்றியின் சின்னமாக உயரமான மினுராவைக் கட்டி முடித்தார். இளங்கடம் பனூர் என்ற கிராமத்தையும் மானியமாகக் கொடுத்தார்.

பிரதாப் சிங்குக்குப் பிறகு ஆட்சிபுரிந்துவந்த துளசி மன்னன் மேலும் பதினைந்து கிராமங்களை தர்காவுக்கு மானிய மாக அளித்தான்.

நாகூர் தர்கா ஷரீபின் பரப்பளவு ஒரு லட்சத்து 94 ஆயிரத்து 790 சதுர அடி.

கடற்கரையிலுள்ள சில்லடியையும் மக்கள் தரிசிக்கிறார்கள் அந்த இடத்தில் நாகூர் ஆண்டகை தங்கியிருந்திருக்கிறார்கள் அவர்கள் அங்கிருந்துதான் கண்ணாடியைக் கடலில் வீசி எறிந்து ஒரு கப்பலின் ஓட்டையை அடைத்து அற்புதம் நிகழ்த்தினார்கள் என்று சொல்லப்படுகிறது.

நாகூர் நாயகத்தின் தலைமாட்டில் ஒரு சிறு தோட்டம் இருக்கிறது. அதில் பூக்கும் மல்லிகை பிரசாதத்துடன் தரப் படுகிறது. ஒரு மருந்தாக இது கருதப்படுகிறது. தர்காவி லுள்ள ஒரு கிணற்றின் நீரும் அவ்வாறே கருதப்படுகிறது.

பாதுஷா நாயகம் அவர்கள் பயன்படுத்திய தஸ்பீஹ், பச்சைத்துணியில் தைக்கப்பட்ட தொப்பி, திருவோடு, கை கோல், மிதியடிக் கட்டை ஆகியவற்றை இன்றும் நாகூரில் காணலாம், அவர்களுக்கு ஞானாசிரியர் முகம்மது கவுது அவர் களால் கைப்பட எழுதித்தரப்பட்ட ஜவாஹிருல்கம்ஸா கிரந் தமும் பால நாயகருக்கு ஆண்டகை மக்கா நகரில் ஒரே இர வில் எழுதித் தந்த திருக்குர்ஆன் பிரதியும் பாதுகாத்து வைக்கப் பட்டிருக்கின்றன.

நாகூர் பால நாயகர்

முதுபக்!

தர்கா ஷரீபின் மிக முக்கியமான ஓர் இடம் வடகிழக்கு மூலையில் இருக்கும் இந்தச் சதுர மண்டபம் சரித்திரச் சின்ன மாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

ஷாஹுல் ஹமீது நாயகம் அவர்கள் மறைவுக் காலம் வரை தங்கியிருக்க வேண்டிய இடம் அதுவே என்று ஹிலுறு (அலை) அவர்கள் மூலம் இறை கட்டளை பிறப்பிக்கப்பட்டது. உலகையே தம்முடைய குடையின் கீழ் ஆண்டுவந்த சிக்கந்தர் துல்கர்னைன் எனும் மன்னர் சிலகாலம் தங்கியிருந்த இடம் நாகூர் என்று பாதுஷா நாயகம் அவர்களுக்கு உணர்த்தப்

பட்டது. தஞ்சை அரசன் ஒதுக்கித் தந்த நிலப்பகுதியை சீரமைப்புச் செய்யும் பணி நடைபெற்ற போது ஹிழுறு (அலை) அவர்கள் கூறிய அடையாளங்களை பாதுஷா நாயகம் கண்டார்கள். இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள். முதுபக் அடையாளச் சின்னங்களில் ஒன்று.

இறை ஆணையின்படி ஷாஹுல் ஹமீது நாயகம் அவர்கள் முதுபக்கிலேயே தங்கியிருந்து மறைவுற்றார்கள். அவர்களின் விருப்பப்படி காரணப்புதல்வர் பால நாயகர் ஸெய்யிது முகம்மது யூசுப் தாதா அவர்கள் வாழ்ந்த இடமும் அதுதான்.

இந்தச் சதுர மண்டபத்தைப் பார்க்கும்போது பால நாயகர் அவர்களின் சரித்திரம் மனத்தில் ஓடுகிறது.

லாகூர் நகர காஜியும் முப்தியுமான நூருத்தீன் அவர்களுக்கும் ஜொஹ்ரா அம்மையாருக்கும் தலைமகவாக ஹிஜ்ரி 959-ஆம் ஆண்டு ரஜபு மாதம் பன்னிரண்டாம்நாள் முகம்மது யூசுப் சாகிபு தாதா அவர்கள் பிறந்தார்கள். ஏழு வயது நிரம்பியதும் புதல்வரைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஷாஹுல் ஹமீது நாயகம் அவர்கள் கூறியிருந்ததால் அந்தப் பருவத்திலேயே தமது ஞானத் தந்தையை உணர்ந்து கொண்டு அவர்களிடம் அனுப்பிவைக்குமாறு பெற்றோரிடம் மொழிந்தனர் பிள்ளை. அவர்களுக்குப் பின்னால் பிறந்த சகோதரர்கள் முயீனுத்தீன், ஹசன், பகுருத்தீன் ஆகிய மூவர்.

ஏழாம் ஆண்டு முடிவதற்கு முன்பே கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்ற யூசுப் சாகிபு அவர்கள் 'தம் தந்தைஎங்கே?' என்று பெற்றோரிடம் வினவ, 'இதோ நான் இருக்கிறேனே' என்று முப்தி நூருத்தீன் கூறினார்கள்.

''நீங்கள் என் உடலுக்குத்தான் தந்தை ஆன்மாவுக்குரிய தந்தையாரை நான் கேட்கிறேன்'' என்று பாலநாயகர் திரும்பக் கேட்டார்கள்.

பிள்ளையின் விருப்பப்படி பாதுஷா நாயகம் அவர்களிடம் பெற்றவர்கள் அனுப்பி வைத்தார்கள். புனித மக்கா நகரில் காரணப் புதல்வரும் ஞானத்தந்தையும் சந்தித்துக்கொண்ட

திலிருந்து அவர்களின் பாச நிழலிலேயே பாலநாயகர் இருந்து வந்தார்கள். அவர்கள் அற்புதங்களை நிகழ்த்திய போதெல்லாம் புதல்வர் அருகிலிருந்தார்கள்.

அரேபியாவில் ஒன்பதாண்டு காலம் சஞ்சாரம் செய்து விட்டு சீடர்களுடன் தென்னாடு நோக்கி மரக்கலத்தில் வந்த போது ஒரு நிகழ்ச்சி.

'கடலிற் பாலரிட்ட தசுபீகுமணியைக்
கரையிற் கிஸ்திமி லெடுத்தீர்'

என்று வண்ணக் களஞ்சியப் புலவர் பாடுகிறார் அந்த நிகழ்ச்சியை.

ஜித்தாவிலிருந்து புறப்பட்ட மரக்கலம் நடுக்கடலில் விரைந்து வந்து கொண்டிருந்த சமயம் ஷாஹுல் ஹமீது நாயகர் அவர்கள், பாலநாயகரிடம் ஜபமாலையை (தஸ்பீஹ் மணிமாலை) கேட்டார்கள். முதல் நாள் அந்த மாலை கடலில் விழுந்து விட்டதாக மைந்தர் சொல்லவே, 'அது கிடைக்கும். கமண்டலத்தைக் கொண்டு கடலில் தண்ணீர் முகந்தால் அதனுடன் சேர்ந்து தஸ்பீஹ் மாலை வந்து விடும்' என்று தந்தையார் சொன்னார்கள்.

அவ்வாறே நடந்தது. அப்பொழுது பாலநாயகருக்கு வயது ஒன்பது.

திருமணம்

யூசுப் சாகிப் தாதா அவர்களின் திருமணம் குறிப்பிடத் தக்க சிறப்புமிக்க நிகழ்ச்சி.

பருவ வயது எய்திய பாலநாயகருக்குத் திருமணம் செய்து வைக்க நாகூர் ஆண்டகையவர்கள் முடிவு செய்தார்கள். மணவாழ்வில் விருப்பம் இல்லை என்று மைந்தர் சொல்லியும், இல்லற வாழ்வு நடத்துவதே முறை என்று அறிவுரை கூறி மேலைநாகூர் செல்வர் காஜா மகுதூம் அவர்களின் புதல்வியைப் பெண்கேட்டு அனுப்பினார்கள். ஒரு சந்நியாசியுடன் சம்பந்தம்செய்து கொள்ளத் தாம் தயாராக இல்லை என்று மறுத்துவிட்டார் காஜா மகுதூம் அவர்கள்.

சிறிது காலத்தில் அந்தச் செல்வர் பல இழப்புகளுக்கு ஆளானார். அவருடைய கப்பல்கள் கடலில் மூழ்கிவிட்டன. மூத்த மகள் நோயுற்று இறந்தார். நாகூர் நாயகரை அவமதித்த குற்றத்தின் பலனே இவை என்பதையுணர்ந்த காஜா மகுதூம், தம் இளைய மகள் செய்யது சுல்தான் பீவியுடன் நாகூருக்கு வந்தார். பிழை பொறுக்குமாறு கோரி தம் புதல்வியை பாலநாயகருக்கு மணமுடித்துக் கொடுக்க அனுமதி கோரினார்.

திருமணம் நடந்தது. முதுபக்கில் வாழ்க்கையைத் தொடங்கினார்கள். செல்வச்சீமானின் புதல்வி என்ற எண்ணத்திற்கு இடம் கொடுக்காமல் எளிய முறையில் யூசுப் சாகிப் தாதா அவர்களுடன் இல்லறம் நிகழ்த்தினார் சுல்தான் பீவி அம்மையார்.

ஒருமுறை பாலநாயகர் நாகப்பட்டினம் சென்றபோது மக்கள் சிறப்பாக வரவேற்று உபசரித்து காணிக்கையும் கொடுத்தார்கள். நாகூர் திரும்பியதும் பாதுஷா நாயகம் அவர்களிடம் காணிக்கைப் பணத்தை மைந்தர் தந்தபோது தந்தையார் சற்றே வாட்டமடைந்தார்கள். கைநீட்டிக் காணிக்கை பெற்றுவிட்டதால், அதைக்கொண்டே பால நாயகரின் சந்ததியினர் வாழவேண்டும் என்று கூறினார்கள்.

நாற்பது வயதுக்குள் எட்டுமக்கள் பாலநாயகருக்குப் பிறந்தார்கள். மூத்த புதல்வர் ஷாஹ் பாபா பஹ்ருத்தீன். மூன்ருவது புதல்வர் ஷாஹ் சுல்தான் கபீரி அவர்கள் மீது பாலநாயகருக்கு மிகுந்த பிரியம்.

பாதுஷா நாயகம் அடக்கமான மூன்றும் நாள் காலையில் ஹிலுறு (அலை) அவர்களின் தரிசனம் யூசுப் சாகிப் தாதா அவர்களுக்குக் கிடைத்தது. பாலநாயகர் நாகூரைவிட்டு வேறெங்கும் போகக்கூடாது என்றும் அவர்களின் சந்ததியினர் காலம் காலமாக அங்கேயே பல்கிப் பெருகியிருப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

பாலநாயகர் அவர்களின் ஆறு ஆண்மக்களுக்கும் இரு பெண்களுக்கும் மேலநாகூரில் வாழ்ந்து வந்த பஹாவுத்தீன்

ஹஸரத் அவர்களின் ஆறு பெண்களும், இரு ஆண்களும் ஒரே இடத்தில் திருமணம் செய்து வைக்கப்பட்டார்கள்.

யூசுப் சாகிப் தாதா அவர்களுக்கு வயது 94. தங்களுடைய இறுதி நாள் அணுகிவிட்டதை அறிந்தார்கள்: அதன்படி ஹிஜ்ரி 1032 துல்ஹஜ் மாதம், மூன்றும் நாள் அவர்கள் மறைந்தார்கள். தாதா அவர்களின் பரம்பரையினரே நாகூரில் வாழ்ந்துவரும் சாகிபுமார்கள்.

பாவ நாயகர் அவர்கள் தந்தையின் சமாதிக்கு மேற்கு விலாப்புறத்தில் அடக்கமாகியுள்ளனர்.

நாகூர் நாயகம் மாண்பு

ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீது ஆண்டகையின் மாண்பு எத்தகையது?

மறைந்த அறிஞர் மு. கரீம்கனி அவர்கள் குறிப்பிடுகிறார்:

''நபியின் வாரிசுதாரர்களாகிய (உலமா) அறிஞர்களின் சரித்திரத்தை ஆராயுங்கால் ஹிஜ்ரி 1015 வரை - ஏழாயிரம் ஆண்டுகளின் காலச்சக்கரம் முடியும் வரை அந்தக் காலச் சக்கர வேகத்துக்குத் தகுந்த வண்ணமே முஸ்லிம் உலகில் தோன்றிய அறிஞர்கள், நபியின் கருத்துக்களை விளக்குபவர்களாக இருந்து வந்தார்கள்; பிறகு 354 ஆண்டின் மறு, வேகமான, காலச் சக்கரம் ஆரம்பித்த காலத்தில் தோன்றிய முதல் அறிஞர் ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீது ஆண்டகை (ரலி) ஆவார்கள். அவர்கள் ஒரு நகரிலிருந்துகொண்டு உபதேசம் செய்து கொண்டு இருந்தார்களாவென்று சிந்தியுங்கள்; போக்குவரத்து சாதனங்கள் உண்டாகாதிருந்தும், கால்நடையாகவும், பாய்க்கட்டு மரக்கலவாயிலாகவும் அவர்கள் உலகத்தைச் சுற்றி தீன்முழக்கம் செய்த மாண்பைக் கவனியுங்கள். கால்நடையாக வடக்கில் இமயமலையையும் கடந்து மகாசீனம் வரை சென்று பிரச்சாரம் செய்தார்கள். பிறகு மேற்கில், அரபுநாடுகள் துருக்கி ஆகிய நாடுகளில் தீன் சுடர் கொளுத்தினார்கள். அதன்பின், கிழக்கில் மலாயா, இந்தோனேசியா வரை இறுதியாக, தெற்கில் தென்னிந்தியா

விலும் இலங்கையிலும் தீன்கொடி ஏற்றினார்கள். இடைக் கால சகாப்தமாகிய முன்னூற்றி ஐம்பத்திநான்கு ஆண்டு களின் ஆரம்பத்தில் தோன்றி, மாறிய காலச்சக்கர வேகத்தை உணர்ந்து, அதற்குரிய பெரும் பிரயாசையுடன் தீனுடைய பொறுப்பை நிறைவேற்றிய மகான் அல்லவா ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீது (ரலி) ஆண்டகை அவர்கள்!

''ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீது ஆண்டகை கடைசி காலத்தில் தமிழ்நாட்டில் வந்து சமாதி பெற்றதால் கல்விக் குறைவுள்ள நம்மவர்கள் அவர்கள் எழுதியவற்றையும், போதித்தவற்றையும் பாதுகாக்கத் தவறிவிட்டனர். ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீது ஆண்டகையின் குரு ஆகிய செய்யிது முகம்மது கவுது (ரலி) அவர்கள் வடஇந்தியாவில் குவாலிய ரில் சமாதி பெற்றிருக்கிறார்கள். வடஇந்தியாவில் கல்விநிலை தென்னிந்தியாவை விட ஒருபடி மேலாக இருந்த காரணத் தினால் ஹஜ்ரத் முகம்மது கவுது குவாலியரி (ரலி) எழுதிய எழுத்துக்களும், செய்தருளிய போதனைகளும் அழியாது இருக் கின்றன. இவற்றைப் படித்து பயனெய்தும் சந்தர்ப்பம் எமக்கு கிடைத்தது உண்டு, அதுகொண்டு ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீது ஆண்டகை (ரலி) அவர்கள் எத்தகைய போதனைகளை அக்காலத்தில் செய்தருளியிருக்கக்கூடும் என்பதை ஒருவிதத் தில் அறியக் கூடியவர்களாக இருக்கிறோம். கலப்பற்ற தவ்ஹீ தின் ஞானத்தையே ஹஜ்ரத் முகம்மது கவுது குவாலியரியும் அன்று போதித்தார்கள். ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீதும் போதித்து அருளினார்கள்...வருடம் ஒருமுறை தங்கள் பெயரைக் கூறிக் கொண்டு கூடு எடுத்து திருவிழா நடத்தும் கோஷ்டியை உண்டாக்குவதற்கு ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீது ஆண்டகை உலகுக்கு வரவில்லை. உலகில் சுத்த சத்திய தவ்ஹீது நிலைபெறுவதற்காக தங்களின் ஜீவியத்தையே தத்தம் செய்து உலகில் தீன்சுடர் கொளுத்திய மகானாக விளங்கினார்கள். கன்ஜுல் கரர்மாத்தைப் புரட்டிப் பாருங் கள். ஹிலுறு (அலை) அவர்கள், மஹ்தீ தோன்றுவது பற்றி ஹஜ்ரத் ஷாஹுல்ஹமீது ஆண்டகையுடன் சம்பாஷித்ததாக வும், மஹ்தீ காலத்தில் வெளியாவதற்கு இருந்த ரசக் கிணற் றைக் கட்டியதாகவும் எழுதப்பட்டு இருக்கிறதல்லவா?

கொம்புத் தேங்காய் முளைக்க வைக்கவும் சிலரின் வயிறு களில் உள்ள மருந்திடுகளை வெளியாக்கவும், பிசாசு பிடித்த வர்களை சுத்திகரிக்கவும் அவர்கள் வரவில்லை. இவை சில்லறை சித்துக்கள். ஹஜ்ரத் ஷாஹுல் ஹமீதின் கால் தூசிப்பட்ட வர்கள் செய்யக்கூடியவை. அவர்கள் தோன்றினார்கள், ஒரு சகாப்த ஆரம்பத்தில். மறு சகாப்தத்துக்குரிய ஆரம்ப முயற்சிகளைச் செய்துவிட்டு, கடைசி காலத்தில் கனிதரக் கூடிய விருட்சங்களுக்கு வித்திட்டுவிட்டு உலகிலிருந்து மறைந்தார்கள்...''

சிந்தனைக்குரிய செய்திகள் இவை. மறுக்க முடியாத பேருண்மைகள் அல்லவா?

தரிசனத்துக்காக ஷாஹுல் ஹமீது நாயகத்தின் சந்நி தானத்துக்கு வருபவர்கள் லட்சக்கணக்கான மக்கள் மட்டு மல்ல. வானவர்களும் மெஞ்ஞானிகளும், வலிமார்களும், சிம்மாசனாதிபதிகளும், இறையருள் பெற்ற பெரியோர் களும் ஆன்மீக தரிசனத்திற்காக வந்து நின்று 'ஜெய ஜெயா' என்று போற்றுகிறார்கள். முகம்மது இரசூல் தந்த மன்னரே' என்று துதிக்கிறார்கள். இந்தத் திருக்காட்சி ஞானிகளின் கண்ணுக்கு மட்டுமே தெரியும்.

மஸ்தான் சாகிபு அவர்கள் நாகூர் பகுதிக்கு வந்து வள்ளல் ஷாஹுல் ஹமீது நாயகத்தை தரிசித்து நின்ற போது கண்ட காட்சி அது. பாடல் வருமாறு:

'திக்குத் திகந்தமும் கொண்டாடியே வந்து
தீன்கூறி நிற்பர் கோடி
சிங்காசனாதிபர் கையேந்தியே வந்து
ஜெய ஜெயா வென்பர் கோடி

ஹக்கனருள் பெற்ற பெரியோர்கள்
ஒலிமார்கள் அணியணியாக நிற்பர் கோடி
அஞ்ஞான வேரறுத்திட்ட மெய்ஞ்
ஞானிகளணைந்தருகு நிற்பர் கோடி

மக்க நகராளும் முகம்மதிர சூல் தந்த
மன்னரே என்பர் கோடி
வசனித்து நிற்கவே கொலுவீற்றிருக்குமுன்
மகிமை சொல வாயுமுண்டோ

தக்க பெரியோனருள் தங்கியே நிற்கின்ற
தவராஜ செம்மேருவே
தயை வைத்தென்னை யாள் சற்குணங்குடிகொண்ட
ஷாஹுல் ஹமீதரசரே!'

ஞானியர் போற்றும் ஞானியர் அரசர் ஷாஹுல் ஹமீது நாயகரின் மகிமை சொல்லி அடங்காத ஒன்று.

'அப்துல் காதிருள் நாகையூர் எங்களூரே!' என்று புலவர் பாடினார். ஆமாம், ஹஜ்ரத் அப்துல்காதிர் ஷாஹுல் ஹமீது பாதுஷா நாயகம் அவர்களின் அருளாட்சி ஆண்டு. நூற்றாண்டுகளாக நாகூர் பதியில் நடந்து வருகிறது. அலை வீசும் நாகூர்ப் பதியை நோக்கி அலையாக மக்கள் வந்த வண்ணம் இருக்கிறார்கள். அலையோடு அருள் பொங்கும் அற்புதம் அனுதினமும் இங்கே நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

நாகூர் ஆண்டகையின் நன்மொழிகள்

கோபம் நல்வினை அனைத்தையும் துண்டிக்கும் ஒரு கூர்மையான ஆயுதமாகும்.

சினமென்னும் நெருப்பை நல்லுணர்வு எனும் நீரைக் கொண்டு பெரியோர்கள் அணைத்து உயர்வு பெற்றார்கள்.

கோபம் சுவர்க்கத்திற்குச் செல்லும் பாதையைத் தடுத்து விடும். கோபம் கொண்டு நடப்பவர்களுக்கு எதுவும் கை கூடாது.

தொழுகையை கைவிடாதீர்கள். தொழுகைக்காக ஒவ்வொரு முறை தலைதாழ்த்தும்போதும் உங்கள் மதிப்பு இறைவன் முன்னிலையில் உயர்கிறது.

நீங்கள் தவறு செய்துவிட்டதாகத் தெரிந்தால்அதற்காக மனம் கசிந்து இறைவனிடம் மன்னிப்பு கோருங்கள். அவன் மன்னித்தருள்பவனாக இருக்கிறான்.

மரணம் என்பது வாழ்க்கையின் ஓர் அத்தியாயத்தின் முடிவும் மறு அத்தியாயத்தின் ஆரம்பமும் ஆகும்.

வரவு செலவு கணக்கைப் போல் மக்களின் ஏட்டில் இறைவன் நன்மை தீமைகளை எழுதிக்கொள்கிறான். இதை உணராமல் மரணத்தை மறந்து செயலில் ஈடுபடுபவர்கள் இறுதியில் இன்னலுக்கு ஆளாகிறார்கள்.

நல்ல செயல் புரிவதற்காக நீங்கள் ஓர் அடி எடுத்து வைத்தால் சுவர்க்கம் புகுவதற்கு உங்களுக்காக ஒரு படி அமைக்கப்படுகிறது.

நல்ல எண்ணங்களை நினையுங்கள்; நல்ல கருமங்களைச் செய்யுங்கள் நல்லவற்றையே நீங்கள் பெறுவீர்கள்.

வறுமையில் சுகம் காணுங்கள். இறைவனின் பிடியினால் வறுமையின் வலு தெரியும். அதை எண்ணி தளர்ந்து விடாதீர்கள்.

உடல் வலிமை உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது இறைவனை வணங்குவதற்காகத்தான். செல்வம் உங்களுக்குத் தரப்பட்டிருப்பது, உங்களைச்சுற்றியுள்ள ஏழை எளியவர்களுக்கு தானம் செய்வதற்காகத்தான்.

நாம் செய்யும் நன்மை தீமைக்குரிய பலன்களையே நாம் அடைவோம். இறைவனுக்கு உவப்பான செயல்களைச் செய்தால் அவன் அன்புக்கும் அருளுக்கும் நாம் உரியவர்களாகிறோம்.

இறைவனின் பார்வை எந்த நேரமும் நம்மீது இருக்கிறது என்பதை நினைத்து தீமைகளிலிருந்து நாம் விலகியிருந்தால் எவ்வித அச்சமும் நமக்கு இல்லை.

மறுமையில் நீங்கள் சுவர்க்கவாசியாக இருக்கவிரும்பினால் இவ்வுலகில் மதக்கட்டுப்பாடு என்ற விலங்குகளுடன் வாழ்ந்து விடுங்கள்.

விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்யவும், விலக்கப்பட்ட தீமைகளைச் செய்யாமலிருக்கவுமே மனிதர்களுக்கு இறைவன் பகுத்தறிவைக் கொடுத்திருக்கிறான்.

உரிமை : ஆசிரியர்க்கு

முதற்பதிப்பு : நவம்பர் 1981
இரண்டாம் பதிப்பு : ஆகஸ்ட் 1985
மூன்றும் பதிப்பு : செப்டம்பர் 1989

விலை : ரூ.

சற்குணம் குடிகொண்ட ஷாஹுல்
ஹமீது அரசர்—

மக்க நகராளும் முகம்மது இரசூல்
தந்த மன்னர்—

நாகூரில் அருளாட்சி புரியும் பாதுஷா நாயகம் அவர்களின் மகிமை சொல்லி முடியாதது. சொல்ல முயலவேண்டும் என்ற ஆசையின் சுருக்கமான வெளிப்பாடு இது.
எல்லோரும் படிக்கவேண்டும் என்பதற்காக எழுதியிருக்கிறேன்,
இறையருளால்.

சென்னை அன்பன்,
20-11-81 ஜே. எம். சாலி